**சாதாரணக்கூட்டம்**

**<u>வேதாரண்யம் நகராட்சியின் 2019-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 15 ம் நாள் வெள்ளிக்கிழமை மாலை 4.00 மணிக்கு நடைபெற்ற சாதாரண கூட்ட நடவடிக்கைகள்</u>**

**முன்னிலை: திரு. என். ஆர். ரவிச்சந்திரன்,**
**தனி அலுவலர்.**

<table>
<tr><th>மன்ற கூட்டம் நடைபெற்ற நாள்</th><th>வரிசை எண் மற்றும் மன்ற கூட்டப்பொருள்</th><th>மன்றத்தின் தீர்மானம்</th></tr>
<tr><td>15.02.2019</td><td>

**<u>பொருள் எண்.1</u>**

வேதாரண்யம் நகராட்சியில் TUFIDCO LOAN – 2018-19ன்கீழ் ரு.330.00 இலட்சம் மதிப்பீட்டில் குடிநீர் குழாய் வீட்டு இணைப்புகள் வழங்கிடும் (9509 இணைப்புகள்) பணிக்கு 13.02.2019 அன்று பெறப்பட்ட ஒரே ஒப்பந்தப்புள்ளியின் தொழில்நுட்ப தகுதி உறை (Technical Bid)-ஐ கூர்ந்தாய்வு செய்ததில் ஒப்பந்ததாரின் ஆவணங்கள் சரியாக உள்ள நிலையில் 15.02.2019 அன்று (Price Bid) விலை உறை திறக்கப்பட்டு அதன் ஒப்புநோக்கு பட்டியல் கீழ்கண்டவாறு தயார் செய்யப்பட்டுள்ளது.

<table>
<tr><th>வ.எ.</th><th>ஒப்பந்ததாரர் பெயர்</th><th>மதிப்பீட்டுத்தொகை ரு.</th><th>ஒப்பந்தப்புள்ளி தொகை ரூபாயில்</th><th>மதிப்பீட்டின்படி விலை விகிதம்</th></tr>
<tr><td>1</td><td>M/s. RM Engineering works, கோயம்புத்துார்-25</td><td>2,86,31,599.00</td><td>3,15,29,086.39</td><td>10.12% கூடுதல்</td></tr>
</table>

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளியின் விலைவிகிதம் மதிப்பீட்டு விலைவிகிதத்தினை விட 10.12% அதிகமாக உள்ளதால், விலைகுறைப்பு செய்து தருமாறு ஒப்பந்ததாரர் M/s. RM Engineering works, கோயம்புத்துார்-25 என்பவரிடம் விலைக்குறைப்பு செய்து தர கோரப்பட்டதற்கிணங்க விலைக்குறைப்பு செய்தபின் ஒப்பந்தப்புள்ளி விலை விவரம் கீழ்க்கண்டவாறாகும்.

<table>
<tr><th>வ.எ.</th><th>ஒப்பந்ததாரர் பெயர்</th><th>மதிப்பீட்டுத்தொகை ரு.</th><th>ஒப்பந்தப்புள்ளி தொகை ரூபாயில்</th><th>மதிப்பீட்டின்படி விலை விகிதம்</th></tr>
<tr><td>1</td><td>M/s. RM Engineering works, கோயம்புத்துார்-25</td><td>2,86,31,599.00</td><td>3,00,48,440.00</td><td>4.95% கூடுதல்</td></tr>
</table>

மேற்காணும் ஒப்புநோக்கு பட்டியலின்படி விலை குறைப்பு செய்தபின் உள்ள ஒப்பந்தப்புள்ளியை ஏற்பதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

</td><td>

**தீர்மான எண்.11**
**<u>அங்கீகரிக்கப்பட்டது.</u>**

</td></tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| | அலுவலக குறிப்பு:- (ந.க.1285/2017 இ1) | 1) ஒப்பந்ததாரர் கொடுத்துள்ள ஒப்பந்த விகிதம் கூடுதல் 4.95% சதவீதமானது அனுமதிக்கப்பட்ட மதிப்பீட்டின் தொகைக்கும் 5%-க்குள் உள்ளதாலும், மேலும் இப்பணி திட்டப்பணி என்பதாலும் மன்றம் ஏற்கலாம்.<br>2) அனுமதிக்கப்பட்ட மதிப்பீட்டின் தொகையை விட கூடுதலாகும் தொகையை நகராட்சி பொதுநிதியில் ஈடு செய்து கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம். மேலும் பணியின் அவசர, அவசியத்தினை கருத்தில் கொண்டு தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கிய அலுவலக நடவடிக்கையினை மன்றம் அங்கீகரிக்கலாம். | |

ஆணையர்/தனி அலுவலர்,
வேதாரண்யம் நகராட்சி.

**சாதாரணக்கூட்டம்**

வேதாரண்யம் நகராட்சியின் 2019-ம் ஆண்டு **பிப்ரவரி மாதம்** 28 **ம் நாள் வியாழக்கிழமை** மாலை 4.00 மணிக்கு நடைபெற்ற சாதாரண கூட்ட நடவடிக்கைகள்

**முன்னிலை: திரு. என். ஆர். ரவிச்சந்திரன்,**
**தனி அலுவலர்.**

| மன்ற கூட்டம் நடைபெற்ற நாள் | வரிசை எண் மற்றும் மன்ற கூட்டப்பொருள் | மன்றத்தின் தீர்மானம் |
|---|---|---|
| 28.02.2019 | **பொருள் எண்.1**<br>வேதாரண்யம் நகராட்சியில் உள்ள 21 வார்டுகளில், கொள்ளிடம் கூட்டு குடிநீர் திட்டத்தின்கீழ் குடிநீர் இணைப்புகள் இல்லாத 9509 எண்ணிக்கையில் சொத்துவரி அடிப்படையிலான குடியிருப்புகளுக்கு குடிநீர் இணைப்புகள் வழங்கும் பணிக்கு TUFIDCO சென்னை நிறுவனத்தின் மூலம் வட்டியில்லா கடன் (ம) நகராட்சி நிதி பங்களிப்புடன் ரூ.3.30 கோடி மதிப்பீட்டில் 15.02.2019-ல் பணி உத்தரவு வழங்கப்பட்டு இணைப்பு வழங்கும்பணி நடவடிக்கையில் உள்ளது.<br>மேலும் குடிநீர் வீட்டு இணைப்புகள் வழங்குவதில் முன்னர் உள்ள நடைமுறைகளை எளிதாக்கி குடிநீர் இணைப்பிற்கான டெபாசிட் தொகை ரூ.5000/- மற்றும் குடிநீர் இணைப்பிற்கான அனைத்து பொருட்செலவு மற்றும் அதற்கான பணியாட்களின் சம்பளம் போன்றவற்றின் செலவுத்தொகை ரூ.3160/- ஐ சம்மந்தப்பட்ட குடியிருப்பின் சொத்துவரி விதிப்புடன் இணைத்து 10 சம தவணைகளில் (5 ஆண்டுகள்) வசூல் செய்திட அறிவுறுத்தி வரப்பெற்ற நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.13277/2017/குவ1 நாள்.27.06.2018 மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.<br>மேலும் முன்னர் உள்ள குடிநீர் திட்ட உபவிதிகளில் உரிய திருத்தம் செய்து வீட்டு உபயோக வைப்புத்தொகையினை 10 சமதவணைகளிலும் மற்றும் குடிநீர் இணைப்பு செலவினங்கள் ஆகியவற்றை சொத்துவரியுடன் இணைத்து வசூல் செய்யும் நகரமைப்புகளுக்கான மையப்படுத்தப்பட்ட இணையவழி மென்பொருளில் (Urban Tree Software) உரிய திருத்தங்கள் செய்யவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு : வைப்புத்தொகை மற்றும் குடிநீர் இணைப்பிற்கான செலவினம் சொத்துவரி விதிப்புடன் இணைத்து 10 சம தவணைகளில் வசூல் செய்யவும் மன்றம் அனுமதிக்கலாம். | **தீர்மான எண்.12**<br>**அனுமதிக்கப்பட்டது.** |

<table>
<tr>
<td>28.02.2019</td>
<td>

**பொருள் எண்.2**

**தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15-ன்கீழ் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள்:-**

16.11.2018 அன்று ஏற்பட்ட கஜா புயலின் தாக்கத்தினால் சேதமடைந்த குடிநீர் விநியோக குழாய்கள், சிறுமின்விசை இறைப்பான் மற்றும் உள்ளூர் குடிநீர் ஆதாரங்கள் சீர் செய்யப்பட்ட விவரம்:

| வ.எ. | பணியின் பெயர் | மதிப்பீடு ரூபாயில் |
|---|---|---|
| 1. | குடிநீர் விநியோக உள்ளூர் குடிநீர் ஆதாரங்களை சீர் செய்யும்பணி | 9,61,515 |
| 2. | சிறுமின்விசை இறைப்பான தொட்டிகள் மற்றும் மின்பணிகள் | 9,99,685 |
| 3. | குடிநீர் விநியோக குழாய்களை சீர்செய்யும் பணி | 9,96,771 |
| 4. | குடிநீர் விநியோக குழாய்களை சீர்செய்யும் பணி | 3,68,868 |
| 5. | குடிநீர் விநியோக குழாய்களை சீர்செய்யும் பணி | 9,94,870 |
| | கூடுதல் | 43,21,709 |

அலுவலக குறிப்பு: மன்றம் பதிவு செய்யலாம்.

</td>
<td>

**<u>தீர்மான எண்.13</u>**

**<u>அனுமதிக்கப்பட்டது.</u>**

</td>
</tr>
<tr>
<td>28.02.2019</td>
<td>

**பொருள் எண்.3**

வேதாரண்யம் நகராட்சிப்பகுதியில் ஒருங்கிணைந்த நகர்புற மேம்பாட்டுத்திட்டம் (IUDM) 2018-19 நிதியின்கீழ் சன்னதி கடற்கரை சாலையில் தார்சாலை மேம்பாடு செய்யும் பணி மற்றும் சாலையின் இருபுறமும் 650 மீட்டர் நீளத்திற்கு பக்கச்சுவர் அமைக்கும் பணிக்காக 22.02.2019 அன்று நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டு அதற்கான தொழில்நுட்ப தகுதி உறை (Technical Bid)-ஐ கூர்ந்தாய்வு செய்ததில் இரண்டு ஒப்பந்ததாரர்களின் ஆவணங்கள் சரியாக உள்ள நிலையில் 25.02.2019 அன்று (Price Bid) விலை உறை திறக்கப்பட்டு அதன் ஒப்புநோக்கு பட்டியல் கீழ்கண்டவாறு தயார் செய்யப்பட்டுள்ளது.

| வ.எ. | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டுத்தொகை ரூ. | ஒப்பந்தப்புள்ளி தொகை ரூபாயில் | மதிப்பீட்டின்படி விலை விகிதம் |
|---|---|---|---|---|
| 1 | ஆர். எழில்மாறன், ஒப்பந்ததாரர், நாகப்பட்டினம் | 4,32,42,179.90 | 4,71,33,187.68 | 9.00% கூடுதல் |
| 2 | அ. அன்பழகன், ஒப்பந்ததாரர், நாககுடையான் | | 4,63,23,304.12 | 7.13% கூடுதல் |

மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளியில் விலைகுறைப்பு செய்து தருமாறு குறைவான ஒப்பந்த விகிதம் அளித்திருந்த ஒப்பந்ததாரர் திரு.அ. அன்பழகன், நாககுடையான் என்பவரிடம் விலைக்குறைப்பு செய்து தர கோரப்பட்டதற்கிணங்க விலைக்குறைப்பு செய்தபின் ஒப்பந்தப்புள்ளி விவரம் கீழ்க்கண்டவாறாகும்.

</td>
<td>

**<u>தீர்மான எண்.14</u>**

**<u>அனுமதிக்கப்பட்டது.</u>**

</td>
</tr>
</table>

| வ.எ. | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டுத்தொகை ரூ. | விலை குறைப்புக்கு முன் ஒப்பந்தப்புள்ளி தொகை ரூபாயில் | விலை குறைப்புக்கு பின் ஒப்பந்தப்புள்ளி தொகை ரூபாயில் |
|---|---|---|---|---|
| 1 | திரு.அ.அன்பழகன், நாககுடையான் | 4,32,42,179.90 | 4,63,23,304.12 (7.13% மதிப்பீட்டைவிட கூடுதல்) | 4,71,33,187.68 (4.96% மதிப்பீட்டைவிட கூடுதல்) |

மேற்காணும் ஒப்புநோக்கு பட்டியலின்படி விலை குறைப்பு செய்தபின் உள்ள ஒப்பந்தப்புள்ளியை ஏற்பதற்கு அனுமதி மன்றத்தின் வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:- 1. மேற்கண்ட பணிக்கு ஒப்பந்ததாரர் திரு.அ. அன்பழகன், நாககுடையான் என்பவரின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டு தொகையிலிருந்து 4.96% கூடுதலாக கொடுத்துள்ளார். இக்கூடுதல் சதவீதமானது அனுமதிக்கப்பட்ட மதிப்பீட்டின் தொகைக்கும் 5%-க்குள் உள்ளதாலும், மேலும் இப்பணி திட்டப்பணி என்பதாலும் மன்றம் ஏற்கலாம்.

2. அனுமதிக்கப்பட்ட மதிப்பீட்டின் தொகையை விட கூடுதலாகும் தொகையை நகராட்சி பொதுநிதியில் ஈடு செய்து கொள்ளவும் அனுமதிக்கலாம்.

(ந.க.42/2019 இ1)

---

28.02.2019

**பொருள் எண்.4**

இந்நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் வார்டு 1 முதல் 21 வார்டுகளில் துப்புரவு பணிகள் மேற்கொள்ள போதுமான துப்புரவு பணியாளர்கள் இல்லாத காரணத்தால் துப்புரவுப்பணிக்கு தேவையான 37 துப்புரவு பணியாளர்களை மாவட்ட ஆட்சியர் நிர்ணயிக்கும் தினக்கூலி விலை விகிதபட்டியல்படி ஒப்பந்தப்புள்ளிகள் கோரி நடவடிக்கை எடுக்க இவ்வலுவலக நகர்மன்ற தீர்மான எண்.195 நாள்:31.12.2018 .ல் அளிக்கப்பட்டுள்ள அனுமதியின் பேரில் 14.02.2019 அன்று மாலை 3.00 மணியளவில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்ட விபரப்படி வரப்பெற்றுள்ளது.

| வ.எண். | நிறுவனத்தின் பெயர் & முகவரி | ஒப்பந்தப்புள்ளி தொகை |
|---|---|---|
| 1. | விவேகானந்தர் சுயஉதவிக்குழு, வேதாரண்யம் | ரூ.310/- EPF ரூ.77.50/-, மொத்தம் ரூ.387.50/- (நாள் ஒன்றுக்கு தொகை) |
| 2. | அம்மா சுயஉதவிக்குழு, 3- கீழவீதி, வேதாரண்யம் | ரூ.300+EPFரூ.75/-மொத்தம்ரூ.375/- (நாள் ஒன்றுக்கு தொகை) |

மேற்படி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.2 அம்மா சுய உதவிக்குழு

**தீர்மான எண்.15**
**அனுமதிக்கப்பட்டது.**

அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளி குறைவாக உள்ளதால் மேற்படி ஒப்பந்தப்புள்ளியை ஏற்று வேலை உத்தரவு வழங்கிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு: வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் அம்மா சுயஉதவிக்குழு வேதாரண்யம் அவர்கள் துப்புரவுப்பணி மேற்கொண்டதற்கான முன் அனுபவ சான்றும் மேற்கண்ட குழுவின் நடவடிக்கை நகலும் இணைத்துள்ளதால் மாவட்ட ஆட்சியர், நாகப்பட்டினம் தினக்கூலி விலை விகித பட்டியல்படி தொகை குறிப்பிட்டுள்ளதால் மேற்படி அம்மா சுயஉதவிக்குழு அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளியை ஏற்று வேலை உத்தரவு வழங்கிட மன்றம் அனுமதிக்கலாம்.

28.02.2019

**பொருள் எண்.5**

வேதாரண்யம் நகராட்சி அலுவலகத்தில் உள்ள அனைத்து கணிணிகள் மற்றும் பிரிண்டர்கள் **2019-20**ம் ஆண்டிற்குகான ஆண்டு பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள **30.01.2019** அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில், கீழ்கண்ட நிறுவனகளிடமிருந்து வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| Sl.No. | Probable Quantity in figures | Description of work | Rate quoted by Crystal Systems | Rate quoted by Inspire technology |
|---|---|---|---|---|
| | | | | |
| 1 | 1.00 | Hcl Core 2 duo 2.8 GHZ system with all necessary materials | 3450.00 | 3600.00 |
| 2 | 1.00 | Hcl Core 2 duo 3.4 GHZ system with all necessary materials | 3500.00 | 3600.00 |
| 3 | 1.00 | Hcl Core 2 duo 2.53 GHZ system with all necessary materials | 3500.00 | 3600.00 |
| 4 | 1.00 | Hcl Core 2 duo 2.93 GHZ system with all necessary materials | 3500.00 | 3600.00 |
| 5 | 1.00 | HCL core i3 3.2 GHZ system with all necessary materials | 4100.00 | 4200.00 |
| 6 | 1.00 | Hcl server 3.4 GHZ system with all necessary materials | 3200.00 | 3300.00 |
| 7 | 1.00 | Dell core i5 System as per standard specification | 4400.00 | 4500.00 |
| 8 | 1.00 | Canon lide 110 scanner with all necessary materials | 1200.00 | 1200.00 |
| 9 | 1.00 | Broadband modem with all necessary materials | 2200.00 | 750.00 |
| 10 | 1.00 | 24 port HCL switch with all necessary materials as | 1600.00 | 1800.00 |
| 11 | 1.00 | Repairing and Replacing of Hp laserjet 1020 printer with all accessories | 2150.00 | 2600.00 |

**தீர்மான எண்.16**
**அனுமதிக்கப்பட்டது.**

| | | | | |
|---|---|---|---|---|
| 12 | 1.00 | Repairing and Replacing of Hp laserjet M1005 printer with all accessories | 2600.00 | 2200.00 |
| 13 | 1.00 | Repairing and Replacing of Canon LBP 2900 laserjet printer with all accessories | 2000.00 | 2200.00 |
| 14 | 1.00 | Repairing and Replacing of Hp laserjet Pro M202DW printer with all accessories | 2500.00 | 2600.00 |
| 15 | 1.00 | Repairing and Replacing of TVSe msp 450 champion printer with all accessories | 2200.00 | 2200.00 |
| 16 | 1.00 | Supply and fixing of Networking connection with all materials | 65.00 | 67.00 |

அலுவலக குறிப்பு : அ. வரப்பெற்ற 2 விலைப்புள்ளிகளில் Crystal Systems நிறுவனத்தின் விலைவிகிதம் குறைவாக உள்ளதை மன்றம் ஏற்கலாம். செலவினங்கள் நகராட்சி நிதியில் மேற்கொள்ளலாம்.

ஆ. அலுவலகத்திற்கு தேவையான ஆவணங்கள் நகல் எடுத்தல் (Xerox) கடந்த ஆண்டு விலைவிகிதத்திலேயே செய்துதர நிலா ஜெராக்ஸ் வேதாரண்யம் என்ற நிறுவனம் ஒப்புதல் தெரிவித்துள்ளதால் அதனை 2019-2020ம் ஆண்டுக்குரிய செலவினங்கள் நகராட்சி நிதியில் மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம்.

**(523/18/சி1)**

28.02.2019

**<u>பொருள் எண்.6</u>**

வேதாரண்யம் நகராட்சி அலுவலகத்தில் உள்ள பிரிண்டர்களுக்கு 2019-20ம் ஆண்டிற்கான டோனர்கள் சப்ளை செய்தல் மற்றும் Refill செய்தல் பணிக்கு 30.01.2019 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில், கீழ்கண்ட நிறுவனங்களிடமிருந்து வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| Sl.No. | Qty | Description of work | Rate quoted by Saraswathi Computers (Rs.) | Rate quoted by Crystal Systems (Rs.) |
|---|---|---|---|---|
| | | | | |
| 1 | 1.00 | Supply of 12 A compatibility tonner cartridge | 1550.00 | 1650.00 |
| 2 | 1.00 | Supply of 88 A compatibility tonner cartridge | 1600.00 | 1700.00 |

**தீர்மான எண். 17 அனுமதிக்கப்பட்டது.**

| | | | | |
|---|---|---|---|---|
| 3 | | Refilling with all necessary cadridge materials to 12 A tonner cartridge | | |
| | 1.00 | a) Refilling the cadridge | 550.00 | 600.00 |
| | 1.00 | b) Viber Blade | 570.00 | 600.00 |
| | 1.00 | c) PCR unit | 500.00 | 600.00 |
| | 1.00 | d) Drum Unit | 500.00 | 580.00 |
| 4 | | Refilling with all necessary cadridge materials to 88 A tonner cartridge | | |
| | 1.00 | a) Refilling the cadridge | 550.00 | 580.00 |
| | 1.00 | b) Viber Blade | 500.00 | 550.00 |
| | 1.00 | c) PCR unit | 480.00 | 500.00 |
| | 1.00 | d) Drum Unit | 550.00 | 600.00 |

அலுவலக குறிப்பு : வரப்பெற்ற 2 விலைப்புள்ளிகளில் Saraswathi Computers நிறுவனத்தின் விலைவிகிதம் குறைவாக உள்ளதை மன்றம் ஏற்கலாம்.

**(523/18/சி1)**

28.02.2019

**பொருள் எண்.7**

வேதாரண்யம் நகராட்சி அலுவலக பணிக்கு **2019-2020**ம் ஆண்டிற்கு ஒப்பந்த அடிப்படையில் பணியாளர்கள் வழங்கிட **30.01.2019** அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், ஒப்புதலுக்க்ும வைக்கப்பட்டுள்ளது.

| Sl.No | Item of Bill of Quantites | Quantity | Unit | **Vivenkanandar Self Help Group, Vedaranyam** | | | **M/s Sri Anantha Kamatchi Contractors, Andarkadu** | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | Rate in Rs. | EPF | Total | Rate in Rs. | EPF | Total |
| 1 | Driver | 1.00 | Nos. | 390.00 | 97.50 | 487.50 | 400.00 | 100.00 | 500.00 |
| 2 | Computer Operator | 1.00 | Nos. | 380.00 | 95.00 | 475.00 | 390.00 | 97.50 | 487.50 |
| 3 | Typist | 1.00 | Nos. | 350.00 | 87.50 | 437.50 | 370.00 | 92.50 | 462.50 |
| 4 | OHT Pump Room Operator | 1.00 | Nos. | 300.00 | 75.00 | 375.00 | 320.00 | 80.00 | 400.00 |
| 5 | UGD Pump Room Operator | 1.00 | Nos. | 300.00 | 75.00 | 375.00 | 320.00 | 80.00 | 400.00 |

**தீர்மான எண்.18 ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

<table>
<tr><td></td><td>
<table>
<tr><td>6</td><td>Office Section Writer</td><td>1.00</td><td>Nos.</td><td>350.00</td><td>87.50</td><td>437.50</td><td>320.00</td><td>80.00</td><td>400.00</td></tr>
<tr><td>7</td><td>Miscelleous</td><td>1.00</td><td>Nos.</td><td>300.00</td><td>75.00</td><td>375.00</td><td>320.00</td><td>80.00</td><td>400.00</td></tr>
</table>
அலுவலக குறிப்பு : வரப்பெற்ற 2 ஒப்பந்தப்புள்ளிகளில் விவேகானந்தர் சுய உதவிக்குழு, வேதாரண்யம் குறைவாக உள்ளதை ஏற்கலாம்.<br>
**(37/18/சி1)**
</td><td></td></tr>
<tr><td>28.02.2019</td><td>
**பொருள் எண்.8**<br><br>
நகராட்சியின் 2018-19 ம் ஆண்டின் திருத்திய மதிப்பீடு மற்றும் 2019-20 ம் ஆண்டின் திட்ட மதிப்பீடு பார்வைக்கும், ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.<br><br>
அலுவலக குறிப்பு : ஒப்புதல் அளிக்கலாம்.
</td><td>**தீர்மான எண்.19 அனுமதிக்கப்பட்டது.**</td></tr>
<tr><td>28.02.2019</td><td>
**பொருள் எண்.9**<br><br>
வேதாரண்யம் நகராட்சிக்கு சொந்தமான கீழ்குறிப்பிட்ட இனங்கள் 01.04.19 முதல் 31.03.20 முடிய ஓராண்டு கால அளவிற்கு கட்டணம் வசூல் செய்யும் உரிமத்திற்கு 30.01.19 ம் தேதிய பொது ஏலம்/ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது.<br>
1. தினசரி சந்தை கட்டண வசூல் உரிமம் - ரூ.225000<br>
2. தோப்புத்துறை செக்போஸ்ட் கட்டண வசூல்- ரூ. 6540<br><br>
மேற்குறிப்பிட்ட இனங்களுக்கு ஆர். முனியப்பன் என்பவர் மட்டும் ரூ.225000/- மற்றும் .6540/-க்கு ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளார். வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளி விகிதம் சென்ற ஆண்டு த்தகை தொகையினை விட கூடுதலாக உள்ளது. மன்றத்தின் பார்வைக்கும், ஒப்புதலுக்கும் வக்கப்படுகிறது.<br>
அலுவலக குறிப்பு : திரு ஆர். முனியப்பன் என்பவர் கோரிய ஒப்பந்தப்புள்ளி சென்ற ஆண்டு குத்தகை தொகையினை விட கூடுதலாக இருப்பதனால் உயர்ந்த ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.
</td><td>**தீர்மான எண். 20 அனுமதிக்கப்பட்டது.**</td></tr>
</table>

| | | |
|---|---|---|
| 28.02.2019 | **பொருள் எண்.10**<br>வேதாரண்யம் நகராட்சிக்கு சொந்தமான பேருந்து நிலைய கட்டண கழிவறை கட்டண வசூல் உரிமம் 01.04.19 முதல் 31.03.20 முடிய குத்தகை உரிமத்திற்கான பொது ஏலம்/ஒப்பந்தப்புள்ளி 21.02.2019 அன்று கோரப்பட்டது.<br><br>மேற்படி குத்தகை இனத்திற்கான ஒப்பந்தப்புள்ளி விகிதங்கள் 1. வி. நடராஜன் மற்றும் 2. ஆர். முனியப்பன் ஆகியோரிடமிருந்து வரப்பெற்றது.<br><br>திரு வி. நடராஜன் என்பவர் நாள் ஒன்றுக்கு ரூ.129/- என்ற விலை விகிதத்திற்கும், திரு ஆர். முனியப்பன் என்பவர் நாளொன்றுக்கு ரூ.120/- என்ற விலை விகிதத்திற்கும் ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளார்கள். வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.<br><br>அலுவலக குறிப்பு : திரு வி நடராஜன் என்பவர் கோரிய ஒப்பந்தப்புள்ளி நாளொன்றுக்கு ரூ.129/- எனவும், ஆண்டுக்கு ரூ.46440/- என்றும் வரப்பெற்றுள்ளது. இது சென்ற ஆண்டை விட கூடுதலாக இருப்பதனால் திரு. வி. நடராஜன் என்பவரது ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம். | **தீர்மான எண்.21**<br>**அனுமதிக்கப்பட்டது.** |
| 28.02.2019 | **பொருள் எண்.11**<br>வேதாரண்யம் நகராட்சியில் நகர்ப்புற உள்ளாட்சி தேர்தல்-2019-க்கான வாக்காளர் பட்டியல்கள், வாக்குச்சாவடி பட்டியல்கள் மற்றும் பிற அறிக்கைகள் அச்சிட்டு தயார் செய்திடவும், மேலும் இதர செலவினங்கள் மேற்கொள்ளவும் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.<br><br>அலுவலக குறிப்பு : ஒப்புதல் அளிக்கலாம். செலவினங்கள் நகராட்சி நிதியில் மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம். | **தீர்மான எண்22**<br>**அனுமதிக்கப்பட்டது** |
| 28.02.019 | **பொருள் எண்.12**<br><br>வேதாரண்யம் நகராட்சிக்கு சொந்தமான குத்தகை இனங்களான வணிக வளாக கடைகள், தங்கும் அறைகள், பேருந்து நிலைய கடைகள் மற்றும் மேலமடவிளாக கடைகள் மற்றும் இதர நடப்பில் உள்ள குத்தகை இனங்களுக்கு உரிய வைப்புத்தொகைகள் மூன்றாண்டுக்கு மேல் உள்ள வைப்புத்தொகையாக கணக்கில் எடுக்கப்பட்டு, காலங்கடந்த வைப்புத்தொகைக்கு மாற்றம் செய்யப்பட்டு பதிவு மேற்கொள்ளப்பட்டது. மேற்படி ஏல இனங்கள் தற்போது நடப்பில் உள்ளதால், காலங்கடந்த வைப்புத்தொகையிலிருந்து நடப்பு வைப்புத்தொகை பதிவேட்டிற்கு மாற்றம் செய்து பராமரித்திட, மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.<br><br>அலுவலக குறிப்பு : ஒப்புதல் அளிக்கலாம். | **தீர்மான எண்.23**<br>**ஒப்புதல்**<br>**அளிக்கப்பட்டது.** |

28.02.2019

**<u>பொருள் எண்.13</u>**

வேதாரண்யம் நகராட்சி பகுதியில் **16.02.2019** அன்று அருள்மிகு வேதாரண்யேஸ்வரர் சுவாமி திருக்கோயிலுக்கு சொந்தமான திருத்தேரோட்டம் நடைபெற உள்ளதால் தேரோட்டம் நடைபெற ஏதுவாக வடக்குவீதியில் பேருந்து நிலையம் எதிர்புறம் சாலையின் ஒருபக்கத்தில் சிமெண்ட் சாலையாக அகலப்படுத்தும் பணி மேற்கொள்ள **12.02.2019** அன்று கோரப்பட்ட ஒப்பந்தப்புள்ளியில் கீழ்க்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| **வ.எண்.** | **ஒப்பந்ததாரர் பெயர் (திருவாளர்கள்)** | **மதிப்பீட்டுத் தொகை (ரூ. இலட்சத்தில்)** | **ஒப்பந்தப்புள்ளி தொகை (ரூபாயில்)** | **மதிப்பீட்டின் படி விலை விகிதம்** |
|---|---|---|---|---|
| 1. | ஸ்ரீஅனந்தகாமாட்சி காண்ட்ராக்டர்ஸ், அண்டர்காடு | 3.50 | 3,08,978 | 0.03% குறைவு |
| 2. | அ. அன்பழகன், நாககுடையான் | | 3,09,140 | 0.03% அதிகம் |

மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளியில் மதிப்பீட்டு தொகையை விட **0.03%** குறைவாக ஒப்பந்ததாரர் ஸ்ரீஅனந்தகாமாட்சி காண்ட்ராக்டர்ஸ், அண்டர்காடு என்பவரின் ஒப்பந்தப்புள்ளி வரப்பெற்றுள்ளது. மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளியை ஏற்பதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

1) வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட குறைவாக ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள ஒப்பந்ததாரர் ஸ்ரீஅனந்தகாமாட்சி காண்ட்ராக்டர்ஸ், அண்டர்காடு என்பவரின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் அங்கீகரிக்கலாம்.

2) மேலும் பணியின் அவசர, அவசியத்தினை கருத்தில் கொண்டு தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மான எண்.24.**
**<u>அங்கீகரிக்கப்பட்டது.</u>**

ஆணையர்/தனி அலுவலர்,
வேதாரண்யம் நகராட்சி.